
நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 113 | 4 Pages | 21.11.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 113 | 4 பக்கங்கள் | 21.11.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**பகுத்துணடு பல்லுயி ரோம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்று ளெல்லாந் தலை**

**விளக்கம்:**
கிடைத்ததைப் பகுந்து கொடுத்துத் தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுதல் அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாகும்.

## பணய கைதிகளை கண்டுபிடித்து தருபவர்களுக்கு தலா ரூ. 42 கோடி சன்மானம் இஸ்ரேல் அறிவிப்பு



ஜெருசலேம், நவ.21

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது.

இதையடுத்து ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் 117 பணய கைதிகளை உயிருடன் மீட்டுள்ளது.

அதேபோல், ஹமாஸ் ஆயுதக்குழுவினர்களால் கடத்தப்பட்டு கொல்லப்பட்ட பணய கைதிகளின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. ஆனால், 101 இஸ்ரேலியர்கள் ஹமாஸ் வசம் பணய கைதிகளாக உள்ளனர் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இதில், பலர் உயிரிழந்திருக்கலாம் எனவும் தகவல் வெளியாகியிருந்தது.

அதேவேளை, இந்த போரில் காசாவில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உள்பட 43 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அதேபோல், மேற்குகரையில் ஏற்பட்ட மோதலில் 700க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், காசா முனையில் பணய கைதிகளாக உள்ளவர்களை கண்டுபிடித்து தருபவர்களுக்கு தலா ரூ. 42 கோடி சன்மானம் தரப்படும் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

காசா முனைக்கு சென்ற இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இந்த சன்மான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

பணய கைதிகளை கண்டுபிடித்து எங்களிடம் ஒப்படைப்பவர்களுக்கு ஒவ்வொரு பணய கைதிக்கும் தலா 5 மில்லியன் டாலர்கள் என்ற அடிப்படையில் (இந்திய மதிப்பில் 42 கோடி ரூபாய்) சன்மானம் அளிக்கப்படும்.

பணய கைதியை எங்களிடம் ஒப்படைக்கும் நபரின் அடையாளம் பாதுகாக்கப்படும். அந்த நபர் குடும்பத்துடன் காசாவில் இருந்து பாதுகாப்பான இடத்திற்கு செல்ல இஸ்ரேல் அழைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்ளும்.

பணய கைதிகளின் இருப்பிடத்தை அறிந்து அவர்களை மீட்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறோம். அந்த முயற்சிகளை கைவிடப்போவதில்லை. அனைத்து பணய கைதிகளையும் உயிருடனோ? பிணமாகவோ? மீட்கும்வரை போரை தொடருவோம். யாரேனும் பணய கைதிகளுக்கு தீங்கு விளைவிக்க நினைத்தால் அவர்கள் கொல்லப்படுவர் என்று பிரதமர் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## அமெரிக்காவில் தேசிய அவசரநிலை பிரகடனம் செய்ய டிரம்ப் திட்டம்



வாஷிங்டன், நவ.22

அமெரிக்க அதிபர் தேர்தலில் குடியரசுக்கட்சிசார்பில்போட்டியிட்ட டொனால்டு டிரம்ப் வெற்றி பெற்றார். வரும் ஜனவரி மாதம் அதிபராக டிரம்ப் பதவியேற்க உள்ளார். டொனால்டு டிரம்ப் தனது தேர்தல் பிரசாரத்தின் போது, சட்டவிரோத குடியேற்றம் குறித்து அதிகம் பேசினார். ஜோ பைடன் ஆட்சியில் சட்டவிரோதமாக அமெரிக்க எல்லைக்குள் புகுந்தவர்களை நாடு கடத்தி, மெக்ஸிகோவுடனான எல்லையை உறுதி செய்து நாட்டை பாதுகாப்பேன் என்று டொனால்டு டிரம்ப் உறுதி அளித்திருந்தார்.

இந்தநிலையில், டிரம்ப்தலைமையிலானஆட்சியில்தேசியஅவசரநிலை கொண்டு வரப்பட்டு, ராணுவத்தை பயன்படுத்தி பெருமளவிலான புலம்பெயர்ந்தவர்களைநாடுகடத்தவுள்ளார்என்றுட்ரூத்சமூகஊடகத்தில் ஒருவர்பதிவிட்டிருந்தார். அந்தபதிவுக்குபதிலளித்தடிரம்ப், உண்மைதான் என்று ஒப்புக் கொண்டுள்ளார்.

அமெரிக்காவில்சுமார்1.1கோடிமக்கள்சட்டவிரோதமாகதங்கியுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன. டிரம்பின் நாடு கடத்தல் நேரடியாக 2 கோடி குடும்பங்களை பாதிக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது

## ஹைதி: போலீசார் நடத்திய அதிரடி தாக்குதலில் ஆயுத கும்பலை சேர்ந்த 28 பேர் பலி



போர்ட்ஓபிரின்ஸ், நவ.21

கரீபியன் தீவு நாடான ஹைதியில் கடந்த 2021ம் ஆண்டு அதிபர் ஜோவெனல் மொய்ஸ் படுகொலை செய்யப்பட்டார். இதையடுத்து, அந்நாட்டில் அரசியல் நிலைத்தன்மையின்றி ஆயுத கும்பல்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது.

ஆயுத கும்பலின் வன்முறை பல மடங்கு அதிகரித்துள்ளது. மேலும் தலைநகர் போர்ட்ஓபிரின்ஸ் உள்ளிட்ட பல இடங்களை ஆயுத கும்பல் தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளது.

இந்நிலையில், அந்நாட்டின் தலைநகர் போர்ட்ஓபிரின்ஸ் அருகே பெடன் வெலி பகுதியில் நேற்று போலீசாருக்கும் ஆயுத கும்பலுக்கும் இடையே துப்பாக்கி சண்டை நடைபெற்றது. இந்த மோதலில் ஆயுதக்குழுவை சேர்ந்த 28 பேர் உயிரிழந்தனர்.

# மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை மத்திய மந்திரிக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம்

சென்னை, நவ.21

தமிழ்நாட்டைச் சேர்ந்த 7 மீனவர்களுடன் சேர்த்து 14 இந்திய மீனவர்கள் குஜராத்தின் போர்பந்தரில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற போது 03012024 அன்று பாகிஸ்தான் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில், கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடி இயந்திரப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தி தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின், மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில், 14 இந்திய மீனவர்கள் (7 மீனவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்) குஜராத்தின் போர்பந்தரில் இருந்து INDGJ25MM3458 மற்றும் INDGJ25MM1582 என்றபதிவெண்கள்கொண்ட இயந்திரப் படகுகளில் மீன் பிடிக்கச் சென்றபோது 0301 2024 அன்று பாகிஸ்தான் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு ஏறக்குறைய 10 மாதங்கள் முடிவடைந்துள்ள நிலையில், மீனவர்களின் தற்போதைய நிலை குறித்தோ, அவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகள் குறித்தோ எவ்விதத் தகவலும் இல்லை என முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



மேலும், மீனவர்களை விடுவிப்பது தொடர்பாக நீண்டகாலமாக நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது என்றும் பொருளீட்டும் மீனவர்கள் இல்லாததால் அவர்களைச் சார்ந்துள்ள குடும்ப உறுப்பினர்கள் மிகுந்த மனவேதனையுடன் உள்ளதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் பாகிஸ்தான் கடற்படையினரால் நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில், மனிதாபிமான அடிப்படையில் அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடி இயந்திரப் படகுகளையும் விடுவிக்க உறுதியான தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தி தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பழனி அருகே ரேஷன் அரிசி கடத்தல்: 2 பேர் கைது, 2300 கிலோ ரேஷன் அரிசி, லாரி பறிமுதல்




திண்டுக்கல், நவ.21

திண்டுக்கல் மாவட்டத்தில், குடிமை பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் (Civil Supplies CID) திண்டுக்கல் DSP செந்தில் இளந்திரையனுக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், ஆய்வாளர் சுகுணா தலைமையிலான குழு பழனி சத்திரப்பட்டி டோல்கேட்டில் தீவிர வாகனத்தணிக்கையில் ஈடுபட்டனர் சோதனையின் போது, ஒரு லாரி நிறுத்தி சோதனை செய்யப்பட்டது. அதில் கேரளாவுக்கு 2300 கிலோ ரேஷன் அரிசி கடத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதானது தெரியவந்தது. போலீசார் மதுரை ஐயர்பங்களா பகுதியை சேர்ந்த கணேஷ்குமார் (53) மற்றும் மதுரை மேலக்கல் பகுதியை சேர்ந்த மகேந்திரன் (31) ஆகிய இருவரை கைது செய்தனர். இவர்களிடமிருந்து ரேஷன் அரிசி மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்திய லாரி ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. மேலும், இந்த வழக்கில் தொடர்புடைய மற்ற இரண்டு பேரை போலீசார் தேடி வருகின்றனர்.

## தஞ்சாவூர்: ஆசிரியை கொலை செய்யப்பட்ட பள்ளியில் டி.ஐ.ஜி நேரில் ஆய்வு

தஞ்சாவூர், நவ.21

தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டினம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றி வந்தவர் ரமணி (26). இந்த நிலையில் ரமணி வழக்கம்போல் இன்று வகுப்பறையில் பாடம் நடத்தி விட்டு ஆசிரியர் ஓய்வு அறையில் இருந்தபோது திடீரென அறைக்குள் நுழைந்த நபர் ஆசிரியை ரமணியை கத்தியால் சரமாரியாக குத்தினார்.

இதில் நிலைகுலைந்து போன ஆசிரியையை சக ஆசிரியர்கள் மீட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்ற நிலையில் வழியிலேயே ரமணி



உயிரிழந்தார்.

ஆசிரியை ரமணியை குத்திக் கொன்றதாக சின்னமனை கிராமத்தை சேர்ந்த மதன்குமார்(28) என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் ரமணியை காதலித்து வந்தது போலீசார் விசாரணையில் தெரிய வந்துள்ளது. ரமணியின் பெற்றோர் திருமணத்திற்கு மறுத்ததால் ஆத்திரத்தில் மதன்குமார் இந்த வெறிச்செயலில் ஈடுபட்டதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இதையடுத்து மதன்குமாரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் தஞ்சாவூரில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில், ஆசிரியை கொலை செய்யப்பட்ட பள்ளியில் தஞ்சை மாவட்ட சரக டி.ஐ.ஜி. ஜியாவுல் ஹக் நேரில் ஆய்வு மேற்கொண்டார். அதன்பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது, இந்த சம்பவம் நடந்த அரை மணி நேரத்தில் குற்றவாளியை போலீசார் கைது செய்தனர். அவரிடம் விசாரணை நடைபெற்று வருகிறது. முதற்கட்ட விசாரணையில் இருவரும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றும் ஒன்றாக பழகி வந்த இருவருக்கும் கருத்து வேறுபாடு இருந்துள்ளது. இதனால் மதன் ரமணியை கத்தியால் குத்தியுள்ளார். அதேபோல இந்த சம்பவம் ஆசிரியர் ஓய்வு அறையில் நடந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## ஆசிரியையை கொலை செய்தவர் மீது சட்ட நடவடிக்கை: அன்பில் மகேஷ்

தஞ்சாவூர், நவ.21

தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டினம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றி வந்தவர் ரமணி (26). இந்த நிலையில் ரமணி வழக்கம்போல் இன்று வகுப்பறையில் பாடம் நடத்திக் கொண்டிருந்தபோது திடீரென வகுப்பறைக்குள்நுழைந்தநபர்ரமணியை கத்தியால் சரமாரியாக குத்தினார். இதில் நிலைகுலைந்து போன ஆசிரியையை சக ஆசிரியர்கள்மீட்டுஅரசுமருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்ற நிலையில் வழியிலேயே ரமணி உயிரிழந்தார்.

ஆசிரியை ரமணியை குத்திக் கொன்றதாக சின்னமனை கிராமத்தை சேர்ந்த மதன்குமார்(28) என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் ரமணியை ஒருதலையாக காதலித்து வந்தது போலீசார் விசாரணையில் தெரிய வந்துள்ளது. ரமணியின் பெற்றோர் திருமணத்திற்கு மறுத்ததால் ஆத்திரத்தில் மதன் குமார் இந்த வெறிச்செயலில் ஈடுபட்டதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இதையடுத்து மதன்குமாரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் தஞ்சாவூரில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில், ஆசிரியையை



ரமணி குத்திக்கொலை செய்யப்பட்டதற்கு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில்,

"தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டினம் அரசுப் பள்ளியில் பணிபுரிந்த ஆசிரியை ரமணி அவர்களின் மீதான தாக்குதலை வன்மையாக கண்டிக்கின்றோம். ஆசிரியர்கள் மீதான வன்முறையை துளியும் சகித்துக் கொள்ள முடியாது. தாக்குதலை நடத்தியவர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆசிரியர் ரமணி அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினர்களுக்கும், மாணவர்களுக்கும், சக ஆசிரியப் பெருமக்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்" என்று தெரிவித்துள்ளார்.

## சென்னை மத்திய குற்றப்பிரிவுக்கு கூடுதல் எஸ்பி நியமனம்: டிஜிபி சங்கர் ஜிவால் உத்தரவு



சென்னை, நவ.21

சென்னை பெருநகர மத்திய குற்றப்பிரிவுக்கு கூடுதல் எஸ்பி பணிநியமனம் செய்து டிஜிபி சங்கர்ஜிவால் உத்தரவிட்டுள்ளார். சென்னைபெருநகர காவல்துறை மத்திய குற்றப்பிரிவு2 கூடுதல் துணை கமிஷனராக இருந்த முத்துவேல்பாண்டி மாற்றப்பட்டு அவருக்கு பதில் காஞ்சிபுரம் மாவட்டம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு கூடுதல் எஸ்பி சார்லஸ் சாம் ராஜதுரை நியமித்து டிஜிபி சங்கர் ஜிவால் உத்தரவிட்டுள்ளார். அதனை தொடர்ந்து கூடுதல் துணை கமிஷனர் முத்துவேல்பாண்டி தற்போது சென்னை பெருநகர கட்டுப்பாட்டு அறையில் பணியாற்றி வருகிறார்.

# டெல்டா மாவட்டங்களில் தொடர் மழை : வயல்களில் தண்ணீர் புகுந்து பயிர்கள் மூழ்கி சேதம்



தஞ்சாவூர், நவ.21

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து வருகிறது. பல்வேறு மாவட்டங்களில் தொடர்ந்து கனமழை கொட்டி வருகிறது. அதன்படி தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் கடந்த ஒரு வாரமாகவே தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நேற்று பகலில் விட்டு விட்டு மழை வெளுத்து வாங்கியது. குறிப்பாக தஞ்சையில் நேற்று மாலை 2 மணி நேரம் தொடர்ந்து கனமழை பெய்தது. பின்னர் இரவில் விட்டு விட்டு பெய்தன. தொடர்ந்து பெய்த மழையால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடின. தாழ்வான இடங்களில் தண்ணீர் தேங்கியது.

தொடர் மழையால் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பின்பட்ட சம்பா, தாளடி நெற்பயிர்கள் மழைநீரால் சூழப்பட்டுள்ளது. குறிப்பாக பாபநாசம் தாலுகா புளியக்குடி, அருந்தவபுரம், கூனஞ்சேரி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கனமழையால் வயல்களில் மழைநீர் புகுந்துள்ளது. இதனால் பயிர்கள் மூழ்கி சேதமடைந்துள்ளன.

இதேபோல் ஓட்டை வாய்க்கால் என்னும் பாசன வடிகால் வாய்க்கால் தூர்வாரப்படாமல் செடி கொடிகள் வளர்ந்து காடு போல் காட்சியளிக்கிறது. இதனால் மழை முழுவதும் வயல் வழியே செல்வதால் நூற்றுக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்ட சம்பா, தாளடி நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கி சேதமடைந்துள்ளன.

இது பற்றி விவசாயிகள் கூறும்போது, தளிகையூர் பகுதியில் புதிதாக கட்டப்பட்ட கதவணை திறக்கப்படாமல் உள்ளதால் வயல்களில் தண்ணீர் தேங்கி உள்ளன. எனவே விவசாயிகளின் நலன் கருதி கதவணையை உடனடியாக திறந்தும், ஓட்டை வாய்க்காலை தூர்வார மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் மாவட்டத்தில் பல இடங்களில் நடவு செய்யப்பட்ட சம்பா, தாளடி இளம் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி பாதிக்கப்பட்டுள்ளன. வடிகால் சரிவர தூர்வாரப்படாததால் மழைநீர் வடிவதற்கு வழியில்லாமல் தேங்கி காணப்படுவதால் பயிர்கள் அழுகும்நிலைஏற்பட்டுள்ளது.

எனவே மழையால் பாதிக்கப்பட்ட வயல்களை அதிகாரிகள் பார்வையிட்டு சேதமதிப்பை கணக்கீட்டு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்றனர்.

வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ள நிலையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் கனமழை இருக்கும் பகுதிகளில் பள்ளியின் தலைமையாசிரியரே விடுமுறை அளிப்பது தொடர்பாக முடிவு எடுக்கலாம் என கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளான பாமினி, கொக்காலாடி, ஆதிரெங்கம், கட்டிமேடு, வேலூர், மணலி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ஒரு மணி நேரத்திற்கு மேலாக கனமழை கொட்டி தீர்த்தது.

# தெரு நாய் தொல்லையை கட்டுப்படுத்த உத்தரவிடக்கோரி மனு தாக்கல் கலெக்டர், ஆணையாளர் பதில் அளிக்க உத்தரவு



மதுரை, நவ.21

திருச்சி ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த கோபி ஆச்சார் என்பவர் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த பொதுநல வழக்கில் கூறியிருந்ததாவது:

திருச்சி மாவட்டம் திருவானைக்கோவிலில் ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் கோவில் உள்ளது. இந்த கோவில் உலக பிரசித்தி பெற்ற திருத்தலங்களில் ஒன்றாக திகழ்ந்து வருகிறது. இந்த கோவிலுக்கு இந்தியா முழுவதிலும் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தினந்தோறும் வந்து செல்கின்றனர்.

இந்நிலையில் இங்கு வந்து செல்லக்கூடிய பக்தர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தும் வகையில் கோவில் முழுவதும் தெரு நாய்கள் அதிக அளவில் உள்ளது. கோவில் சன்னதி முதல் முன்புறம் உள்ள கொடிக்கம்பம் வரை தெரு நாய்கள் வந்து படுத்து கிடக்கின்றது. வரக்கூடிய தெரு நாய்கள் கோவிலுக்குள் அசுத்தம் செய்வதால் ஆகம விதிபடி அதை சுத்தம் செய்ய வேண்டி உள்ளது. மேலும் பக்தர்களின் சுகாதாரம் கேள்விக்குறியாகி வருவதுடன், சில நாய்கள் பக்தர்களை விரட்டி கடிக்க அமைகின்றது.

மேலும் சிலர் பக்தர்கள் என்ற போர்வையில் மது அருந்தி குடித்துவிட்டு கோவிலுக்குள் உள்ளே வந்து படுத்து கிடக்கின்றனர். இதனால் கோவிலின் ஆகம விதிகள் மீறப்படுகிறது. எனவே கோவில் சன்னதியின் புனிதத்தை காக்கும் பொருட்டும், பக்தர்களின் பாதுகாப்பு சுகாதாரத்தை உறுதிப்படுத்தும் வகையிலும் நாய்களைஉள்ளேவர விடாமல் தடுத்தும் கோவிலில் புனித காக்க வலியுறுத்தி மாநகராட்சி மற்றும் கோவில் உதவி ஆணையரிடம் மனு அளித்திருந்தேன்.

இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே கோவில் உள்ளே நாய்கள் வருவதை தடுத்தும், பக்தர்களின் சுகாதாரம் பாதுகாப்பை உறுதிப்படுத்த உத்தரவிட வேண்டும் என்று அந்த மனுவில் கூறியிருந்தார். இந்த வழக்கு நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், மரிய கிளாட் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், ஜம்புகேஸ்வரர் கோவிலில் தெரு நாய்கள் அதிக அளவில் நடமாடுவது குறித்த புகைப்படங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து பக்தர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என வாதிட்டார்.

கோவில் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் நாய்களை கட்டுப்படுத்துவது குறித்து மாநகராட்சிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என தெரிவித்தார். அப்போது நீதிபதிகள், கோவிலுக்குள் வரும் பக்தர்களின் பாதுகாப்பை கோவில் நிர்வாகம் தான் உறுதிப்படுத்த வேண்டும். இந்த மனு குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பது குறித்து விரிவான பதில் மனு தாக்கல் செய்ய திருச்சி மாவட்ட கலெக்டர், கோவில் இணை ஆணையர், திருச்சி மாநகராட்சி ஆணையர் தரப்பில் விரிவான பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டார்.

மேலும் உயர்நீதிமன்ற மதுரைகிளையில் நாய்கள் கட்டுப்படுத்துவது குறித்து தொடர்பான நிலுவையில் உள்ள வழக்குகள் இணைத்து இந்த வழக்கை பட்டியலிடவும் உத்தரவிட்டு வழக்கு விசாரணை ஒத்திவைத்தார்.

# சுடுகாட்டில் இறுதிச்சடங்கு நடந்தபோது உயிருடன் எழுந்தார் மரணத்தில் இருந்து மீண்ட மூதாட்டிக்கு ஆஸ்பத்திரியில் சிகிச்சை



மணப்பாறை, நவ.21

திருச்சி மாவட்டம் மணப்பாறை அருகே மருங்காபுரியை அடுத்த கருமலை சுரக்காப்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் பம்பையன் (வயது 72). இவரது மனைவி சின்னம்மாள் (62). இவர்கள் பூந்தோட்டம் வைத்து விவசாயம் செய்து வருகின்றனர்.

கடந்த 16ந்தேதி சின்னம்மாள் திடீரென்று விஷத்தை குடித்து விட்டார். அக்கம்பக்கத்தினர் சின்னம்மாளை மீட்டு துவரங்குறிச்சியில் உள்ள அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

பின்னர் அவர் மேல் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு செயற்கை சுவாசம் பொருத்தி சிகிச்சை அளித்தனர்.

இருந்த போதிலும் அவரது உடல் நிலை மோசமடைந்தது. இதனால் அவரது உறவினர்கள் சின்னம்மாளை வீட்டுக்கு கொண்டு செல்ல முடிவெடுத்தனர்.

இதையடுத்து நேற்று ஆம்புலன்ஸ் மூலம் சின்னம்மாளை வீட்டுக்கு கொண்டு சென்றனர். வழியில் அவருக்கு பொருத்தப்பட்ட செயற்கை சுவாச கருவியை எடுத்தனர். இதனால் அவரது உடல் அசைவின்றி காணப்பட்டது.

இதையடுத்து சின்னம்மாள் இறந்து விட்டதாக கருதி வீட்டுக்கு செல்லாமல் நேராக சுடுகாட்டுக்கு ஆம்புலன்ஸ் சென்றது. இந்த சம்பவம் குறித்து சின்னம்மாளின் உறவினர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

உறவினர்கள் பதறியபடி ஓடிவந்தனர். சுடுகாட்டில் சின்னமாளுக்கு இறுதி சடங்கு நடந்தது. பின்னர் உடலை எரிப்பதற்காக தகன மேடையில் எடுத்து வைத்தனர். அப்போது உறவினர்கள் சின்னம்மாளை கட்டிப்பிடித்து கதறி அழுதனர்.

திடீரென்று சின்னம்மாள் உறவினர் ஒருவரின் கையை பிடித்து தண்ணீர் வேண்டும் என்று சைகையால் கூறினார். இதனால் அங்கு நின்றவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். என்றாலும் அவர் உயிர் பிழைத்ததகா கருதி மகிழ்ச்சி அடைந்தனர்.

பின்னர் ஆம்புலன்சை திரும்ப வரவழைத்து திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு சின்னம்மாளை தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதித்து டாக்டர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர். இறந்து சுடுகாடு வரை சென்று மீண்ட மூதாட்டி சின்னம்மாளுக்கு தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

# முன்னாள் மத்திய மந்திரி மருமகன் கொலை வழக்கு: பெண்ணுக்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிமன்றம் உத்தரவு

மதுரை, நவ.21

மறைந்த முன்னாள் மத்திய மந்திரி எழில்மலையின் மருமகனும், பிரபல வக்கீலுமாக இருந்தவர் காமராஜ். இவரை கடந்த 2014ம் ஆண்டு சென்னை ஓட்டேரியில் அடுக்கு மாடி குடியிருப்பில் வைத்து ஒரு கும்பல் படுகொலை செய்தது. இந்த சம்பவம்குறித்துசென்னை கொரட்டூர் போலீசார் வழக்கு பதிவு செய்து கல்பனா, கார்த்திக், ஆனந்த் உள்ளிட்ட பலரை கைது செய்தனர்.

இந்த வழக்கு திருவள்ளூர் மாவட்ட கோர்ட்டில் விசாரிக்கப்பட்டது. பின்னர்வழக்குவிசாரணையை வேறு மாவட்டத்திற்கு மாற்ற வேண்டும் என சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதனை விசாரித்த கோர்ட்டு, காமராஜ் கொலை வழக்கை மதுரை மாவட்ட கோர்ட்டுக்கு மாற்றி உத்தரவிட்டது.

அதன் அடிப்படையில் மதுரை மாவட்ட முதன்மை அமர்வு கோர்ட்டில், இந்த வழக்கு கடந்த 2015ம் ஆண்டு முதல் விசாரிக்கப்பட்டு வருகிறது. இந்த வழக்கை விரைந்து விசாரணை நடத்தி உரியதீர்ப்புவழங்க வேண்டும் என கடந்த 2021 ஆம் ஆண்டு மதுரை ஐகோர்ட்டில் மனுதாக்கல் செய்யப்பட்டது. அதனை விசாரித்த ஐகோர்ட், காமராஜ் கொலை வழக்கு விசாரணையை 3 மாதத்தில் முடிக்கும்படி மதுரை மாவட்ட கோர்ட்டுக்கு உத்தரவிட்டது. ஆனாலும் இதுவரை அந்த வழக்கு நிலுவையில் வைக்கப்பட்டு இருந்தது.

இதற்கிடையே 9 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ள அந்த வழக்கை விசாரித்து முடிக்ககெடுவிதிக்கும்படி கொலையுண்ட காமராஜின் சகோதரி மேரி தேன்மொழி, மதுரை ஐகோர்ட்டில் மீண்டும் ஒரு மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கு நீதிபதி கே.கே.ராமகிருஷ்ணன் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது மதுரை மாவட்ட முதன்மை கோர்ட்டு சார்பில் தாக்கல் செய்த பதில் மனுவில், காமராஜ் கொலை வழக்கு விசாரணை முடிக்கப்பட்டு விட்டது. இன்று (19ந்தேதி) அந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட உள்ளது என தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் மாவட்ட முதன்மை நீதிபதி சிவ கடாட்சம் இந்த வழக்கில் கைதான கல்பனா என்ற பெண்ணுக்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். ஆனந்த், கார்த்திக் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர்.

# நெல்லை மேலப்பாளையத்தில் தியேட்டர் மீது பெட்ரோல் குண்டு வீசிய வழக்கில் ஒருவர் கைது

நெல்லை, நவ.21

நெல்லை மேலப்பாளையத்தில் உள்ள அலங்கார் தியேட்டரில் நடிகர் சிவகார்த்திகேயன் நடித்த அமரன் திரைப்படம் இரவு காட்சிகளாக திரையிடப்பட்டு வருகிறது.

இந்த தியேட்டரில் கடந்த 3 நாட்களுக்கு முன்பு அதிகாலை 2 மர்ம நபர்கள் பெட்ரோல் குண்டுகளை வீசிவிட்டு தப்பி சென்றனர். இதுகுறித்து மேலப்பாளையம் போலீசார் வழக்குப்பதிவு செய்து சி.சி.டி.வி. காட்சிகளை அடிப்படையாக கொண்டு விசாரணை நடத்திய போது, அதில் மேலும் ஒருவருக்கு தொடர்பு இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து 3 தனிப்படைகள் அமைத்து தொடர்புடையவர்களை போலீசார் தேடி வந்தனர். மேலும் தென்மண்டல தீவிரவாத தடுப்பு பிரிவு போலீசாரும் தீவிர விசாரணையில் இறங்கினர். மதுரையில் இருந்து அந்த பிரிவின் போலீஸ் சூப்பிரண்டு ரமேஷ் கண்ணா தலைமையிலான போலீசார் நெல்லையில் முகாமிட்டு இன்று 3வது நாளாக விசாரித்து வருகின்றனர்.

சுமார் 60க்கும் மேற்பட்ட சி.சி.டி.வி. காட்சிகளை வைத்து விசாரணை நடத்தி சந்தேகப்படும்படியாக இருந்த 3 நபர்களை மேலப்பாளையம் போலீசார் பிடித்து ரகசிய இடத்தில் வைத்து விசாரணை நடத்தினர். அதில் ஒருவருக்கு இந்த வெடிகுண்டு வீச்சு சம்பவத்தில் தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது. அமரன் திரைப்படத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தான் இந்த வெடிகுண்டு வீச்சு சம்பவம் நடந்துள்ளது என போலீசார் உறுதிபடுத்தி உள்ள நிலையில், அந்த நபரை கைது செய்து போலீசார் துருவி துருவி விசாரித்து வருகின்றனர்.

அந்த நபர் அளிக்கும் தகவலின் அடிப்படையில், வெடிகுண்டு வீச்சு சம்பவத்தில் ஈடுபட்ட மற்ற 2 பேர் யார்யார்? என்பது தெரியவரும் எனவும், இன்றைக்குள் அவர்கள் போலீசில்பிடிபடுவார்கள் எனவும் போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் தீவிரவாத தடுப்பு பிரிவு போலீசாரும் ஒருவரை பிடித்து ரகசிய இடத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அரியலூரில் மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த ஆசிரியர் கைது

அரியலூர், நவ.21

அரியலூரில் ஒரு தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிபவர் ராஜீவ் காந்தி (41). இவர் தனது பள்ளியில் படிக்கும் மாணவிக்கு அடிக்கடி பாலியல் தொல்லை கொடுத்ததாக தெரிகிறது. ஆசிரியர் தன்னிடம் அத்துமீறி நடந்து கொள்வது குறித்து அந்த சிறுமி தனது பெற்றோரிடம் கூறி உள்ளார். இதனை கேட்டு அதிர்ச்சி அடைந்த மாணவியின் பெற்றோர், இது குறித்து அரியலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். இதனை தொடர்ந்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதை தொடர்ந்து ஆசிரியர் ராஜீவ் காந்தியை போலீசார் கைது செய்தனர். பின்பு அவர் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# புதுச்சேரி ஜெயிலில் கைதிகள் 'திடீர்' போராட்டம்

புதுச்சேரி, நவ.21

புதுச்சேரி காலாப்பட்டு மத்திய ஜெயிலில் 200க்கும் மேற்பட்ட தண்டனை கைதிகளும் 500க்கும் மேற்பட்ட விசாரணை கைதிகளும் அடைக்கப்பட்டுள்ளனர். இதில் 107 ஆயுள் தண்டனை கைதிகள் உள்ளனர்.

ஜெயிலில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு உணவு தயாரித்து வழங்க தனியாக சமையலர்கள் யாரும் கிடையாது. ஆயுள் தண்டனை கைதிகள் மூலம் உணவு சமையல் செய்து மற்ற கைதிகளுக்கு வழங்கப்படுகிறது.

இதற்கிடையே 20 ஆண்டுகள் கடந்தும் ஜெயிலில் உள்ள ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் நன்னடத்தை அடிப்படையில் விடுதலை செய்ய கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

புதுச்சேரி அரசின் கைதிகள் நன்னடத்தை அடிப்படையில் விடுதலை செய்யும் கமிட்டி, இதற்கு எதிர்ப்பு தெரிவித்தது.

மேலும் ஜெயிலில் அடைக்கப்பட்டிருந்த ஆயுள் தண்டனை கைதியான பிரபல தாதா கருணா கடந்த சில மாதங்களுக்கு முன்பு பரோலில் வெளியே சென்றார். பின்னர் அவர் தலைமறைவானார். அதன் பிறகு அவரை போலீசார் கைது செய்து மீண்டும் ஜெயிலில் அடைத்தனர்.

இந்த சம்பவத்துக்கு பிறகு மற்ற ஆயுள் தண்டனை கைதிகளுக்கு பரோல் வழங்க ஜெயில் நிர்வாகம் மறுத்து வந்ததாக கூறப்படுகிறது.

இதற்கிடையே ஆயுள் தண்டனை கைதிகள் கருணா, வெங்கடேஷ் இருவரும் உச்ச நீதிமன்றத்தில் மனு செய்தனர். இதையடுத்து இருவரையும் ஜாமினில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. தற்போது கருணா, வெங்கடேஷ் இருவரும் ஜாமினில் வெளியே வந்துள்ளனர். இந்நிலையில் ஜெயிலில் தண்டனை கைதிகள் சிலருக்கு பரோல் விடுமுறை அளிக்க சிறை நிர்வாகம் எதிர்ப்பு தெரிவித்தது. இதனால் தண்டனை கைதிகள் உணவு சமைக்க மாட்டோம் என போராட்டத்தில் குதித்தனர். இதனைத் தொடர்ந்து சிறை நிர்வாகம் விசாரணை கைதிகள் மூலம் உணவு சமைத்து வழங்கி வருகின்றது.

# LIC இணையதளத்தில் இந்தி திணிப்பு எடப்பாடி பழனிசாமி கடும் கண்டனம்



சென்னை, நவ.21

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், பொதுத்துறை நிறுவனமான LIC இந்தியாவின் இணையதளத்தில் இயல்பு நிலை மொழியாக (Default Language) இந்தி மாற்றப்பட்டிருக்கிறது.

இந்தி மொழி தெரியாத மக்களுக்கு தற்போது LIC யின் இணையதளம் பயன்படுத்த முடியாத அளவிற்கு உள்ளது. இணையதளத்தின் மொழி மாற்றும் விருப்பமும் இந்தி மொழியிலேயே இருப்பதால் அதனை கண்டுபிடிக்க முடியாத நிலை உள்ளது. எங்கு, எதில் எப்படி இந்தியை திணிக்கலாம்என்றமுனைப்பிலேயே மத்திய அரசு செயல்படுவது கண்டனத்திற்குரியது. மொழி, பண்பாடு, அமைப்பு, அரசியல் என எல்லாவற்றிலும் பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவில், ஒற்றைத்தன்மையை திணிப்பது நாட்டின் சமநிலையை பாதிக்கும் செயல். அது ஏற்புடையதல்ல. அனைத்து மக்களும் பயன்படுத்தும் வகையில் இணையதளத்தின் இயல்பு நிலை மொழியை ஆங்கிலத்திற்கு மாற்றவும், இந்தி மொழியைத் திணிக்கும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவேண்டாம் எனவும் மத்திய அரசை வலியுறுத்துகிறேன் என கூறியுள்ளார்.

# கந்தர்வ கோட்டை அருகே 2 ஆயிரம் வீடுகளில் தமிழக வெற்றிக்கழக கொடி ஏற்றிய தொண்டர்கள்



கந்தர்வகோட்டை, நவ.21

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை தாலுகாவில் சுமார் 36 கிராம பஞ்சாயத்துகளும் அது சார்ந்த கிராமங்களும் உள்ளன.

இந்த பகுதியில் ஊராட்சிக்கு ஒரு இடத்தில் தமிழக வெற்றிக்கழகம் சார்பாக கொடி கம்பம் நட்டு கொடியேற்று விழா நடத்த கட்சி நிர்வாகிகள் திட்டமிட்டனர்.

இதையடுத்து இதற்கு அனுமதி கோரி கடந்தவாரம் கந்தர்வகோட்டை போலீஸ் நிலையத்தில் தமிழக வெற்றிக்கழகம் சார்பாக மனு கொடுக்கப்பட்டது. மனுவை பெற்றுக்கொண்ட போலீசார் கொடியேற்று விழா நடத்த அனுமதி கொடுக்கவில்லை என தெரிகிறது.

இதுபற்றி நிர்வாகிகள் கேட்டதற்கு இன்று, நாளை என்று தாமதப்படுத்தி வந்துள்ளனர். இதையடுத்து கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் அனைவரும் தங்கள் வீடுகளில் கொடியேற்றுவது என்று முடிவு செய்தனர்.

இதையடுத்து கந்தர்வகோட்டை ஒன்றிய த.வெ.க. தலைவர் அருண்பிசாத், செயலாளர் சுரேந்திரன், பொருளாளர் அய்யாதுரை ஆகியோர் முன்னிலையில் நிர்வாகிகள், தொண்டர்கள் தங்கள் வீடுகளில் கொடிகளை ஏற்றினார்கள். தொடர்ந்து நேற்றும், இன்றும் கொடிகள் ஏற்றப்பட்டு வருகின்றன.

இதுபற்றி நிர்வாகிகள் கூறுகையில், தமிழக வெற்றிக்கழக கொடி ஏற்று விழாவுக்கு முறைப்படி அனுமதி கேட்டு மனு கொடுத்தோம். ஆனால் போலீசார் தொடர்ந்து தாமதப்படுத்தி வந்தனர்.

பொது இடத்தில் கொடியேற்ற தானே போலீஸ் அனுமதி பெறவேண்டும். வீடுகளில் ஏற்ற அனுமதி தேவை இல்லையே என எண்ணி எங்கள் பகுதியில் உள்ள நிர்வாகிகள், உறுப்பினர்கள் வீடுகளில் கட்சி கொடியை ஏற்றியுள்ளோம். இதுவரை சுமார் 2 ஆயிரம் வீடுகளில் கொடி ஏற்றப்பட்டு உள்ளது என்றனர்.

# கோவிலுக்கு சொந்தமான இடம் என கூறி அகற்ற முயற்சி நெல்லையில் கொட்டும் மழையில் பொதுமக்கள் சாலைமறியல்

நெல்லை, நவ.21

நெல்லை டவுன் சந்தி பிள்ளையார் முக்கு பகுதியில் இருந்து கோடீஸ்வரன் நகருக்கு செல்லும் காட்சி மண்டபம் வழியாக செல்லும் சாலையில் ஏராளமான குடியிருப்புகள் உள்ளன.

இந்த சாலையில் டவுன் திருஞானசம்பந்தர் கோவிலுக்கு சொந்தமான இடங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வீடுகள் கட்டப்பட்டுள்ளதாக கூறி இந்து சமய அறநிலையத் துறை சார்பில் ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. அதனை விசாரித்த நீதிபதிகள் ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவிட்டனர்.

இதையடுத்து அறநிலையத்துறை அதிகாரிகள் ஏற்கனவே அந்த பகுதியில் உள்ள ஆக்கிரமிப்பு வீடுகளை அகற்றப்போவதாக நோட்டீஸ் ஒட்டியுள்ளனர். இதற்கு அந்த பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்த நிலையில், இன்று காலை போலீசார் மற்றும் தீயணைப்பு துறையினர் உதவியுடன் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காக



இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் அங்கு சென்றனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் காட்சி மண்டபம் செல்லும் சாலையில் குறுக்காக அமர்ந்து சாலை மறியலில் ஈடுபட்டனர். அந்த மக்களிடம் அறநிலையத்துறை அதிகாரிகள்மற்றும்போலீசார் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனாலும் வீடுகளை இடிக்க எதிர்ப்பு தெரிவித்து அவர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

அப்போது போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் கூறியதாவது:

நாங்கள் கடந்த 1972ம் ஆண்டு முதல் 50 ஆண்டுகளுக்கும் மேலாக இங்கு வசித்து வருகிறோம். கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட மழை வெள்ளத்தில் அந்த பகுதியில் இருந்த சங்கரன் என்பவரது கான்கிரீட் வீடு இடிந்து விழுந்தது.

இதையடுத்து அந்த இடத்திற்கு உரிமை கோர தொடங்கிய அறநிலையத் துறைஅதிகாரிகள், இடிந்த வீடு உள்பட சுமார் 75 சென்ட் இடம் அறநிலைய துறைக்கு தான் சொந்தம் என வாதிட்டனர். ஐகோர்ட்டும் அவர்களுக்கு ஆதரவாக தீர்ப்பளித்துள்ளது.

நாங்கள் மாநகராட்சிக்கு அனைத்து வகையான வரிகளையும் கட்டி வருகிறோம். இப்போது கடந்த 1 மாதத்திற்கு முன்பு வந்து இந்த இடம் அறநிலையத் துறைக்கு சொந்தமான இடம் என்றும், அவற்றை காலி செய்து விடுங்கள், இடிக்கப்போகிறோம் என்றும் அறநிலையத்துறை அதிகாரிகள் எங்கள் வீடுகளில் நோட்டீஸ் ஒட்டி விட்டு சென்றனர்.

இதுகுறித்து நாங்கள் மாவட்ட கலெக்டர் கார்த்திகேயனிடம் சென்று மனு கொடுத்தபோது, இதுகுறித்து நான் எதுவும் உத்தரவு பிறப்பிக்கவில்லை என கூறிவிட்டார்.

இந்த இடத்தை அறநிலையத்துறை அதிகாரிகள் தன்னிச்சையாக செயல்பட்டு வீடுகளை இடிப்பதில் குறியாக உள்ளனர். இந்த பகுதியில் 33 வீடுகள் உள்ளநிலையில்அவற்றை இடிக்க அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களிடம் அறநிலையத்துறை அதிகாரிகள், போலீசார் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

# நீண்ட நேரம் 'செல்பி' எடுத்த உறவினரால் பாகனும் பலியான பரிதாபம்







திருச்செந்தூர், நவ.21

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் 26 வயது தெய்வானை யானை உள்ளது. இந்த கோவில் யானையை பராமரிக்க பாகன்களாக அதே பகுதியை சேர்ந்த உதயகுமார் (வயது 46), ராதாகிருஷ்ணன் (57), செந்தில்குமார் (47) ஆகிய 3 பேர் பணியாற்றி வருகின்றனர்.

யானை பராமரிப்பு பணியில் பாகன் உதயகுமார் மட்டும் இருந்தார். அப்போது அவரை பார்ப்பதற்காக அவரது உறவினரான கன்னியாகுமரி மாவட்டம் பலுகல் பகுதியை சேர்ந்த சிசுபாலன் (59) வந்துள்ளார்.

யானை அருகே சென்றபோது சிசு பாலனை யானை தாக்கியது. அப்போது அதனை பார்த்த பாகன் உதயகுமார் அதனை தடுக்க சென்றபோது அவரையும் யானை தாக்கியதில் 2 பேரும் பலியாகினர்.

இதைத்தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வனத்துறையினர் விரைந்து சென்றனர். இதற்கிடையே சக பாகன்கள் யானையை சாந்தப்படுத்தி கூடுதல் சங்கிலிகள் கொண்டு அதனை கட்டி போட்டனர். சிசுபாலன் ராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்று தனியார் வங்கியில் பணியாற்றி வருகிறார்.

இவரது தந்தை திருச்செந்தூரில் யானை பாகனாக இருந்ததால் சிறு வயது முதலே சிசுபாலன் யானைகளை பார்க்க வருவது வழக்கமாகும். தெய்வானை யானை தங்குவதற்கு ராஜகோபுரம் பகுதியில் குடில் அமைக்கப்பட்டுள்ளது.

அந்த குடிலின் பின் வாசல்வழியாகசிசுபாலன் சென்றுள்ளார். அப்போது அவர் யானையின் துதிக்கையில் முத்தம் கொடுத்தும், யானையின் முன்னால் நின்று தனது செல்போனில் 'செல்பி'யும் எடுத்துள்ளார்.

இதற்கிடையே ஏற்கனவே அந்த யானையிடம் சிசுபாலன் விளையாட்டுத்தனமாக நடந்து கொண்டதாகவும், இதனால் அவர் மீது யானை கோபத்தில் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் நேற்று அவர் நீண்ட நேரம் 'செல்பி' எடுத்ததால் ஆத்திரம் அடைந்த யானை அவரை துதிக்கையால் சுற்றி வளைத்து தாக்கியது. இதனை யானையின் பின்னால் நின்ற உதயகுமார் பார்த்து அதிர்ச்சியடைந்து சிசுபாலனை மீட்க சென்றுள்ளார்.

அப்போது பின்னால் இருந்து வேறு யாரோ வருகிறார்கள் என நினைத்து துதிக்கையால் அவரையும் தாக்கியது. இதில் தலையில் பலத்த காயம் அடைந்த பாகனும், சிசுபாலனும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

பின்னால் வந்த நபர் பாகன் உதயகுமார் என்பது தெரிந்ததும் பாகனை தாக்கி விட்டோமே என்று நினைத்து யானை வருந்தியது.

சி.சி.டி.வி.காட்சிகள்: எப்போதும்யானைபாகன் மீது மிகுந்த பாசத்தில் இருந்து வருமாம். இந்நிலையில் கோபம் தணிந்ததும் பாகனை தாக்கியதை அறிந்த யானை குழந்தை போல் கண்ணீர் விட்டு தன்னை கட்டிப்போட்ட இடத்தில் இருந்து மண்டியிட்டு உதயக்குமாரை துதிக்கையால் தூக்கியவாறு அவரை எழுப்ப முயன்றது.

பலமுறை இவ்வாறாக செய்தும் பாகன் எழுந்திருக்காததால் யானை கண்ணீர் விட்டபடி சோகத்தில் மூழ்கியது. அப்போது யானையை சாந்த படுத்திய சக பாகன்களை பார்த்து தெய்வானை யானை கண் கலங்கி நின்றது. இந்த காட்சிகள் அங்குள்ள சி.சி.டி.வி. காமிராவில் பதிவாகி உள்ளது.

பாகன் உதயகுமார் தெய்வானை யானையுடன் மிகவும் அன்பாக பழகி வந்துள்ளார். சிறு வயது முதலே யானை அவருடன் வளர்ந்ததால் எப்போதும் அது அன்யோன்யமாக நடந்து கொள்ளும். தினமும் நடைபயிற்சியின் போதும், பக்தர்களுக்கு ஆசி வழங்கும்போதும் உதயக்குமாருடன் யானை விளையாடி கொண்டிருக்கும்.

தொட்டியில் குளிக்கும்போதும், முகாம்களுக்கு சென்றிருக்கும்போதும் யானை உதயக்குமாருடன் நெருங்கி பழகி விளையாடுமாம்.

பாகனை தாக்கிய வருத்தத்தில் யானை சோகமாக இருந்ததுடன் இரவு வரை சாப்பிடாமல் இருந்தது. சம்பவம் நேற்று மாலை 3 மணி அளவில் நடந்த நிலையில் இரவு 10 மணி வரை யானை உணவருந்தவில்லை. அதற்கு பின்னர் பாகன்கள் முயற்சியால் சிறிதளவுபச்சைஓலையை சாப்பிட்டது.

இது குறித்து திருச்செந்தூர் வனச்சரக அலுவலர் கவின் கூறும்போது, சிசுபாலன் யானையின் முன்பு நின்று 'செல்பி' எடுத்தவாறு துதிக்கையில் முத்தமிட்டுள்ளார். ஏற்கனவே அவர் மீது ஆத்திரத்தில் இருந்த யானை அவரை தாக்கி உள்ளது என்றார்.

தொடர்ந்து யானைக்கு மாவட்ட வன அலுவலர் ரேவதி ராமன், வனத்துறை மருத்துவர்கள் மனோகர், முத்துகிருஷ்ணன் ஆகியோர் மருத்துவ பரிசோதனை செய்தனர். தொடர்ந்து யானை குடிலை சுற்றி போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

மேலும் தெய்வானை யானையை பராமரிப்பதற்காக நெல்லையப்பர் கோவில் யானை பாகன் ராமதாஸ் என்பவரும் அங்கு வரவழைக்கப்பட்டுள்ளார்.

திருச்செந்தூர் யானை இதுவரை பாகன்களையோ, பக்தர்களையோ தாக்கிய சம்பவங்கள் நடைபெற்றது இல்லை. நேற்றும் அங்கு சென்ற பிற பாகன்களையோ மற்றவர்களையோதாக்காதயானை சிசுபாலனை மட்டும் தாக்கியதன் காரணம் என்ன? என்பது குறித்து வனத்துறையினர் மற்றும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே கடைசியாக பாகன் உதயகுமார் தெய்வானை யானை மீது தண்ணீர் காட்டும் காட்சிகளும், தன்னை அறியாமல் பாகனை தாக்கியதை அறிந்த தெய்வானை யானை குழந்தை போல் கண் கலங்கிய காட்சிகளும் தற்போது சமூக வலை தளங்களில் பரவி வருகிறது. அது பார்ப்பவர்கள் கண்களை கலங்க செய்யும் வகையில் உள்ளது.

# நாகர்கோவில் அருகே காமராஜர் சிலையை தன் சொந்த செலவில் திறந்து வைத்த விஜய் வசந்த் எம்பி

ராமேசுவரம், நவ.21

நாகர்கோவில் பள்ளிவிளையில் அமைந்துள்ள பெருந்தலைவர்காமராஜர் படிப்பகத்தில் பெருந்தலைவரின் சிலை நிறுவ வேண்டும் என்ற காங்கிரஸ் கட்சியினர் மற்றும் படிப்பக நிர்வாகிகள் கன்னியாகுமரி தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் எம்பி யிடம் கோரிக்கை வைத்தனர்.

இதனை நிறைவேறும் விதமாக விஜய்வசந்த்



எம்பி தனது சொந்த செலவிலேயே காமராஜர் வெண்கல சிலையை நிறுவி அதனை அவரது தலைமையிலேயேதிறந்து வைத்தார்.

இந்த விழாவில் நாகர்கோவில் மாநகர மேயர் ரெ. மகேஷ், மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் நவீன் குமார், மாநகராட்சி மண்டல தலைவர் ஜவஹர், காங்கிரஸ் கட்சியின் மண்டல தலைவர் செல்வன், மாமன்ற உறுப்பினர் அனுஷா பிரைட் மற்றும் காங்கிரஸ் திமுக நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சுய உதவி குழுக்களுக்கு ரூ.277.97 கோடி கடன் உதவி: நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் அறிவிப்பு

சென்னை, நவ.21

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது:

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுநிறுவனத்தின் வழிகாட்டுதலில் இயங்கி வரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் குறைந்த பட்சம் 10 20 சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து பகுதி மற்றும் வார்டு அளவில் பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள குழுக்களுக்கு பல்வேறு அரசு திட்டங்களின் பயன்கள் மற்றும் மானிய உதவிகளை பெறவும் இது வழிகாட்டுகிறது.

1.5.2021 முதல் 30.10.2024 வரை 2,538 பகுதி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. 6 மாதங்கள் சிறப்பாக செயல்பட்ட, கூட்டமைப்புகளுக்கும் சுழல் நிதி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 1,415 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.7.07 கோடி சுழல் நிதியாக வழங்கப்பட்டு உள்ளது.

வங்கியில் 317 திட்ட முன் வரைவுகள் சமர்பிக்கப்பட்டு இதுவரை 277.97 கோடி ரூபாய் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு கடனாக வழங்கப்பட்டு உள்ளது.

முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தில் பகுதி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் 3,145 சுய உதவிக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு, 1,929 பள்ளிகளில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் மூலம் 1,11,979 குழந்தைகள் பயன் அடைகின்றனர்.

சிறு, குறு உணவு உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் நிறுவனங்களுக்கான முறைப்படுத்தும் திட்டத்தின் மூலம் 7,019 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.27.08 கோடி ரூபாய் மூலதன ஆதார நிதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெம்மேலியில் கடல்நீரை குடிநீராக்கும் ஆலையில் மத்திய நிதிக்குழுவினர் ஆய்வு



மாமல்லபுரம், நவ.21

டெல்லியில் இருந்து மத்திய அரசின் 16வது நிதிக்குழு தலைவர் அரவிந்த் பனகாரியா தலைமையில், செயலர் ரிவத்விக் பாண்டே, உறுப்பினர்கள் அன்னி ஜார்ஜ், அஜய் நாராயன்ஜா, மனோஜ் பாண்டே, அன்னி ஜார்ஜ் மேத்யு, சவும்யா கண்டி கோஷ், உள்ளிட்ட 12 பேர் கொண்ட குழுவினர் 4 நாட்கள் பயணமாக தமிழ்நாடு வந்துள்ளனர்.

அடுத்த 5 ஆண்டு பொருளாதார வளர்ச்சி மற்றும் வரி வருவாய் திட்டம் எப்படி இருக்க வேண்டும், எதற்கு முக்கியத்துவம் தர வேண்டும், என்பது தொடர்பான பல்வேறு தகவல்கள் மற்றும் அதற்கான தரவுகளை ஒவ்வொரு மாநிலத்திற்கும் சென்று இந்த நிதிக்குழு சேகரித்து வருகிறது.

இதன் ஒரு பகுதியாக இன்று காலை மாமல்லபுரம் அடுத்த நெம்மேலியில் இயங்கிவரும் 15 கோடி லிட்டர் கொள்ளளவு, கடல்நீரை குடிநீராக்கும் ஆலையை குழுவினர் ஆய்வு செய்து, அதன் செயல்பாடுகள், உற்பத்தி, பாது பயன்பாடு, வருவாய் உள்ளிட்ட முக்கிய விஷயங்களை அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர்.

இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது:

தமிழ்நாட்டை பொறுத்தவரை 9வது நிதிக்குழு பரிந்துரைப்படி தமிழ்நாட்டிற்கு, 7.931 சதவீத மாக இருந்த நிதி பகிர்வு, 15வது நிதிக்குழுவால், 4.079 சதவீதமாக குறைக்கப்பட்டது. இதனால், 3.57 லட்சம் கோடி ரூபாய் வரை தமிழ்நாட்டிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே, தமிழக அரசுக்கான நிதி பகிர்வை அதிகரிக்க வேண்டும் என, தமிழக அரசு சார்பில், 16வது நிதிக் குழுவிடம் வலியுறுத்தப்பட உள்ளது. அரசின் தேவைகளை எடுத்துரைத்து நிதி பெறும் பணி, வணிக வரித்துறை செயலர் பரதேஜந்திர நவ்னீத்திடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

பல்வேறு தரப்பினரிடம் ஆலோசனை நடத்தும் 16வது நிதிக்குழு, தன் பரிந்துரைகளை, அடுத்த ஆண்டு அக்.31க்குள் சமர்ப்பிக்கும். இக்குழு பரிந்துரைப்படி, 2026 ஏப்.1 முதல், தமிழ்நாடு நிதியை பெற துவங்கும்

இவ்வாறு அவர்கள் கூறினர்.

ஆய்வின் போது குடிநீர் வடிகால்வாரிய முதன்மை செயலர் கார்த்திகேயன், செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் அருண்ராஜ், எஸ்.பி. சாய்பிரனீத் உள்ளிட்டோர் உடனிருந்தனர். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு ஸ்ரீபெரும்புதூரில் அமைந்துள்ள ஏற்றுமதி தொழில் சார்ந்த நிறுவனங்களை பார்வையிட சென்றனர்.

# பாஜக ஆர்.எஸ்.எஸ். அனைத்து மாநிலங்களிலும் அமைதியை சீர்குலைக்கிறது: செல்வப்பெருந்தகை குற்றச்சாட்டு

நாகர்கோவில், நவ.21

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் பிறந்த நாள் விழா இன்று கொண்டாடப்பட்டது. இதை முன்னிட்டு நாகர்கோவில் டதி சந்திப்பில் உள்ள அவரது சிலைக்கு, தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த இந்திரா காந்தி படத்திற்கும் மரியாதை செலுத்தினார்.

பின்பு செல்வப்பெருந்தகை நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

உலக நாடுகள் எல்லாம் இந்தியாவை உற்று நோக்க பார்க்க வைத்த இரும்பு பெண்மணி மாபெரும் தலைவர், இந்திய தேசத்தை தலைநிமிர செய்த இரும்பு பெண் மணி இந்திரா காந்தியின் பிறந்த நாள் விழாவை குமரி மாவட்டத்தில் கொண்டாடுவதில் பெருமையாக கருதுகிறோம். பயங்கரவாதத்தை ஒழிக்க அரும்பாடுபட்டவர் இந்திரா காந்தி. எனவே பயங்கரவாத எதிர்ப்பு உறுதி மொழி எடுத்துக்கொண்டுள்ளோம். குமரி மாவட்டம் காங்கிரசின் இதயமாக உள்ளது.



ஆட்சியில் பங்கு என்பது குறித்து அகில இந்திய காங்கிரஸ் கட்சி தலைமை தான் முடிவு செய்யும். காங்கிரஸ் கட்சி தேசிய கட்சி ஆகும். 2004 முதல் 2014 வரை ஆட்சியிலும், அதிகாரத்திலும் நாங்கள் பங்கு கொடுத்துள்ளோம். இதுகாங்கிரஸ் பார்முலா. கிராம கமிட்டி அமைப்பதற்காக அந்த திட்டத்தை முன்னோக்கி எடுத்துச் செல்கிறோம். அதுதான் தலையாய கடமையாக பணி செய்து வருகிறோம்.

விஜய் அரசியல் கட்சி தொடங்கி இருப்பது அவரது தார்மீக உரிமையாகும். அரசியலமைப்பு சட்டத்தில் யார் வேண்டுமானாலும் கட்சி ஆரம்பிக்கலாம், இயக்கம் ஆரம்பிக்கலாம். அவரது கருத்தை சொல்லலாம்.

பாரதிய ஜனதா ஆட்சியில் இருக்கும் வரை மணிப்பூரில் கலவரம் இருந்து கொண்டுதான் இருக்கும். எல்லா மாநிலங்களிலும் ஆர்.எஸ்.எஸ்., பாரதிய ஜனதாவும் அமைதியை சீர்குலைத்து வருகிறது. பிரதமர் பல்வேறு நாடுகளுக்கு சென்று கொண்டிருக்கிறார். ஏன் மணிப்பூருக்கு மட்டும் செல்லவில்லை. இது மர்மமாக உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது விஜய்வசந்த் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் ராஜேஷ்குமார், தாரகை கத்பர்ட், மாவட்ட தலைவர்கள் நவீன்குமார், கே.டி.உதயம், பினுலால்சிங், ஐ.என்.டி.யு.சி.தலைவர் சிவக்குமார், நாகர்கோவில் மாநகராட்சி மண்டல தலைவர் செல்வகுமார் மற்றும் முன்னாள் மாவட்ட தலைவர் ராதாகிருஷ்ணன், இளைஞர் காங்கிரஸ் டைசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# மக்கள் நலத்திட்டங்களை அதிக அளவில் நிறைவேற்றியது? உதயநிதியுடன் விவாதிக்க தயார் ஜெயக்குமார்

சென்னை, நவ.21

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்டி.ஜெயக்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சில நாட்களுக்கு முன்பு நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் மக்களுக்கு தேவையான அத்தியாவசியத் திட்டங்களை செயல்படுத்த நிதி இல்லை என்று கூறி விட்டு, கருணாநிதியை தமிழகத்தின் நவீன கால சிற்பி போன்று உருவகப்படுத்துவதற்காக பன்னாட்டு அரங்கம், கடலில் பேனா சிலை போன்ற மக்களின் வரிப்பணத்தைக் கொண்டு மக்களுக்கு பயன் அளிக்காத திட்டங்களுக்கு செலவிடப்படுவதை எடப்பாடி பழனிசாமி சுட்டிக்காட்டினார்.

மேலும் தேர்தலின் போது அரசு ஊழியர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசு, அரசு ஊழியர்களுக்கு துரோகம் செய்து வருகிறது என்றும் தெரிவித்தார். இது சரிதானே...

42 மாத தி.மு.க. ஆட்சியில் மக்களுக்கான புதிய திட்டங்கள் ஏதுமில்லை என்பதை எடப்பாடி பழனிசாமி சுட்டிக்காட்டி, அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற சாதனைகளை பொதுவெளியில் விவாதம் செய்யத் தயார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தயாரா? என்று கேட்டதற்கு, இது வரை வாய் திறக்காத மு.க.ஸ்டாலின், தன் மகன் உதயநிதியை உசுப்பிவிட்டு வாய் நீளம் காட்டியிருக்கிறார்.

ஊரில் தங்களைப் பாராட்ட யாருமில்லை என்ற காரணத்தால் தந்தை மகனை புகழ்வதும், மகன் அப்பாவை சீராட்டுவதும் என்று மேடைக்கு மேடை இவர்கள் நடத்தி வரும் நாடகத்தை எடப்பாடி பழனிசாமி எடுத்து வைத்ததால் கோபம் கொப்பளிக்கிறதோ? உதயநிதி ஸ்டாலின் நஞ்சை கக்கி இருக்கிறார். அரசியலில் தன்னுடைய உழைப்பால் உயர்ந்து, மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றவர் எடப்பாடி பழனிசாமி. தி.மு.க.வை தற்போது முன்னின்று நடத்துபவர் போல் ஒட்டுண்ணிகள் அல்ல நாங்கள். தனக்கு விளம்பரம் கிடைக்கும் என்ற நப்பாசையில் உதயநிதி ஸ்டாலின் வாய்க்கு வந்ததையெல்லாம் உளறக்கூடாது. அவருக்கு நாவடக்கம் தேவை.

57 ஆண்டு திராவிட ஆட்சிக்கால வரலாற்றில், தமிழக மக்கள் நலனுக்குரிய திட்டங்களை அதிக அளவில் நிறைவேற்றியது அ.தி.மு.க. ஆட்சியா? அல்லது தி.மு.க.வின் ஊழல் ஆட்சியா? என்பது குறித்து பொது மேடையில் விவாதிக்க, உதயநிதி தயாரா? அவரோடு விவாதிக்க நான் தயார். இடம், நாள், நேரத்தை அவரே தீர்மானிக்கட்டும். இவ்வாறு ஜெயக்குமார் கூறியுள்ளார்

# ஆன்லைனில் ஆர்டர்.. ரெயில் பயணத்தின்போது 'சிக்கன் ரைஸ்' சாப்பிட்ட வீராங்கனை பலி

சென்னை, நவ.21

கோவை சுகுணாபுரம் பகுதியை சேர்ந்தவர் ராபின் டென்னிஸ் (வயது 40). இவருடைய மகள் எலினா லாரெட் (15). கூடைப்பந்து வீராங்கனையான இவர், அதே பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வந்தார்.

இதற்கிடையே பள்ளிகளுக்கு இடையிலான கூடைப்பந்து போட்டி மத்தியபிரதேச மாநிலம் குவாலியரில் கடந்த 8ந்தேதி முதல் 15ந்தேதி வரை நடைபெற்றது. இந்த போட்டிகளில் விளையாடுவதற்காக எலினா லாரெட், சக மாணவிகளுடன் ரெயிலில் மத்திய பிரதேசம் சென்றார். பின்னர் போட்டியை முடித்துவிட்டு நேற்று முன்தினம் கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் ரெயிலில் சென்னை வந்தார். ரெயில் பயணத்தின் போது சாப்பிடுவதற்காக



ஆன்லைன் மூலமாக ஆர்டர் செய்து சிக்கன் ரைஸ் வாங்கி வைத்திருந்ததாக தெரிகிறது. மாணவி எலினா லாரெட், சக மாணவிகளுடன் சேர்ந்து ரெயிலில் வைத்து சிக்கன் ரைஸ் மற்றும் பர்க்கர் சாப்பிட்டதாக கூறப்படுகிறது. இதனால் அவருக்கு கடும் வயிற்று வலியுடன் கூடிய வாந்தி மயக்கம் ஏற்பட்டது. இது தொடர்பாக எலினா லாரெட் சென்னை அண்ணாநகரில் உள்ள தனது உறவினர் டேவிட் வில்லியம் சிடம் கூறியுள்ளார். அவர், ரெயில் சென்னை வந்ததும் எலினாவை அண்ணாநகர் 4வது அவென்யூவில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தார். சிகிச்சைக்கு பின்னர் எலினா, பெரவள்ளூரில் உள்ள தனது மற்றொரு உறவினர் வீட்டுக்கு சென்றார்.

அங்கு சென்ற சிறிது நேரத்தில் எலினாவுக்கு மீண்டும் வயிற்று வலி ஏற்பட்டுள்ளது. இதில் அவர் மயங்கி கீழே விழுந்தார். உடனே அவருடைய உறவினர்கள் அவரை மீட்டு பெரவள்ளூரில் உள்ள பெரியார் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். ஆஸ்பத்திரியில் எலினாவை பரிசோதனை செய்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து பெரவள்ளூர் போலீசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த போலீசார் எலினாவின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இதுதொடர்பாக பெரவள்ளூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். மாணவி சிக்கன் ரைஸ் சாப்பிட்டதால் உயிரிழந்தாரா? அல்லது அவருடைய இறப்புக்கு வேறு ஏதேனும் காரணங்கள் உள்ளதா? என்பது பிரேத பரிசோதனை அறிக்கைக்கு பின்னரே தெரியவரும் என போலீசார் தெரிவித்தனர். விளையாட சென்ற மாணவி திடீரென உயிரிழந்த சம்பவம் அவருடைய குடும்பத்தினர் மத்தியிலும் சக மாணவமாணவிகள் மத்தியிலும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# உணவகங்களில் பிளாஸ்டிக் பேப்பர், சில்வர் கவர்களுக்கு தடை

சென்னை, நவ.21

ஓட்டல்கள் மற்றும் டீ கடைகளில் பார்சலுக்கு பிளாஸ்டிக் கவர், சில்வர் பேப்பர்களை பயன்படுத்த உணவு பாதுகாப்புத் துறைதடைவிதித்துள்ளது.

பிளாஸ்டிக் பேப்பர், கவர்கள், சில்வர் பாயில் கவர்போன்றவற்றில் உணவுகளை கட்டிக் கொடுத்தால், முதல் முறை பிடிபடுபவர்களுக்கு ரூ.5,000 அபராதம் விதிக்கப்படும் என்றும், தடையை மீறினால் உணவு பாதுகாப்புத் துறை சட்டப்படி கடை உரிமம் ரத்து செய்யப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# இந்தியில் LIC இணையதள பக்கம் வாடிக்கையாளர்கள் குழப்பம்

சென்னை, நவ.21

எல்.ஐ.சி. இணையதள முகப்பு பக்கம் முழுவதுமாக இந்தி மொழியில் மாறியதால் வாடிக்கையாளர்கள் அதிர்ச்சி அடைந்ததும் மட்டுமில்லாமல் மொழி தேர்வு செய்வதில் சிரமம் ஏற்பட்டது.

எல்.ஐ.சி. இணையதள பக்கத்தில் ஆங்கிலம் மொழியை தேர்வு செய்ய முடியாமல் அவதிக்குள்ளாவதால் உடனடியாக சீர் செய்ய வேண்டுமென கோரிக்கை எழுந்தது.

அதனை தொடர்ந்து சிறிது நேரத்திற்குப் பின்னர் எல்.ஐ.சி.யின் முகப்பு பக்கம் ஆங்கிலத்தில் மாறியது. இந்தி, ஆங்கிலம் என மாறிக்கொண்டிருந்த நிலையில், தொழில்நுட்ப கோளாறு காரணமாக முதல் பக்கம் அவ்வாறு தோன்றியது என எல்.ஐ.சி. விளக்கம் அளித்துள்ளது.

# ஈஷா கிராமோத்சவ விளையாட்டுப் போட்டிகள்: கிராமத்து வீரர்கள் பங்கேற்பு



கோவை, நவ.21

ஈஷா சார்பில் நடைபெறும் 'பாரதத்தின் மாபெரும் கிராமப்புற விளையாட்டுத் திருவிழாவான 16வது ஈஷா கிராமோத்சவத்தை' முன்னிட்டு, மொத்தம் 55 லட்சம் மதிப்பிலான பரிசு தொகைகளுடன் கூடிய கிராமங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் தொடங்கியது.

விளையாட்டு போட்டிகள் மூலம் கிராமப்புற மக்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக ஈஷா கிராமோத்சவ திருவிழாவை ஈஷா ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. இதில் கிராமங்களுக்கு இடையேயான வாலிபால், துரோபால் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

அந்த வகையில் இந்தாண்டிற்கான போட்டிகள் 5 தென்னிந்திய மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா மற்றும் ஒரு யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரியில் நடைபெறுகிறது.

162 இடங்களில் நடைபெறும் முதற்கட்டப் போட்டிகளில் 5,000 அணிகளும் மொத்தம் 43,144 வீரர் வீராங்கணைகளும் பங்கேற்கின்றனர். இதில் 10,311 பேர் கிராமங்களில் வசிக்கும் குடும்ப பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டை பொறுத்தவரை முதற்கட்ட கிளஸ்டர் அளவிலான வாலிபால் போட்டிகள் 70 இடங்களிலும், த்ரோபால் போட்டிகள் 24 இடங்களிலும் நடைபெற்றது.

இதில் 6,000 கிராம பஞ்சாயத்துகளில் உள்ள 30,000 கிராமங்களில் இருந்து ஆயிரக்கணக்கான அணிகள் பங்கேற்றன. வாலிபால் போட்டிகளில் 22,522 வீரர்களும், துரோபால் போட்டிகளில் 5,098 பெண்களும் போட்டிகளில் விளையாடினர்.

விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் சட்டமன்ற உறுப்பினர் ரகுராமன், சென்னை பூந்தமல்லியில் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணசாமி, தென்காசியில் சட்டமன்ற உறுப்பினர் பழனி, திருத்தணியில் சட்டமன்ற உறுப்பினர் சந்திரன் ஆகியோர் நேரில் போட்டிகளை தொடங்கி வைத்தனர்.

அதேபோன்று ஒசூரில் போட்டிகளை மாவட்ட வனத்துறை அதிகாரி கார்த்திகேயனி தொடக்கி வைத்தார்.

அதுமட்டுமின்றி மதுரை கள்ளந்தரி மற்றும் காரைக்குடி புதுவயல் பகுதிகளில் நடைபெற்ற போட்டிகளுக்கு பத்திரபதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் பெரியகருப்பன் ஆகியோர் வாழ்த்து தெரிவித்தனர்.

இந்த போட்டிகள் 3 கட்டங்களாக நடைபெறுகிறது. முதற்கட்ட கிளஸ்டர் அளவில் தேர்வான அணிகள் அடுத்து டிசம்பர் 1ந் தேதி நடைபெறும் மண்டல அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு விளையாட உள்ளன.

இதைத்தொடர்ந்து தென்னிந்திய அளவிலான இறுதிப் போட்டிகள் கோவையில் ஆதியோகி முன்பு டிசம்பர் 28ம் தேதி மிக பிரமாண்டமாக நடைபெற உள்ளது.

சத்குரு அவர்களின் வழிகாட்டுதலில், ஈஷா கிராமோத்சவ திருவிழா ஆண்டுதோறும் கிராமப்புற விளையாட்டுகள், கிராமிய கலைகள் மற்றும் உணவு முறைகளை கொண்டாடி புத்துயிர் அளிக்கும் விதமாகவும், உற்சாகமான கிராமிய வாழ்வியலை வெளிப்படுத்தும் வகையிலும் நடத்தப்படுகிறது.

# மக்கள் எதிர்ப்பு தெரிவித்தால் மதுக்கடையை மாற்ற வேண்டும்: சென்னை ஐகோர்ட்

சென்னை, நவ.21

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி காமன்தொட்டி கிராமத்தில் டாஸ்மாக் கடை முன் போலி மதுபானம் விற்பனை செய்ததாக தனக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்கை ரத்து செய்யக் கோரி அந்த பகுதியைச் சேர்ந்த சுந்தர் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், டாஸ்மாக் கடைக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டகடையை, குத்தகை காலம் முடிந்த பிறகும் காலி செய்யாதது குறித்து மாவட்ட ஆட்சியரிடம் புகார் செய்ததால் தனக்கு எதிராக பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு, தமிழகம் முழுவதும் குத்தகை காலம் முடிந்த பிறகும் கடைகளை காலி செய்யாமல் நடத்தப்படுகிறது என்ற அறிக்கையுடன் நேரில் ஆஜராகும்படி டாஸ்மாக் நிர்வாக இயக்குனருக்கு உத்தரவிட்டிருந்தது.

அதன்படி, இந்த வழக்கு நீதிபதி பி.வேல்முருகன் முன் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்த போது, டாஸ்மாக் நிர்வாக இயக்குனர் நேரில் ஆஜராகியிருந்தார். அப்போது, குறிப்பிட்ட கடையை மூன்று நாட்களுக்கு முன் காலி செய்து உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டதாக டாஸ்மாக் நிர்வாகம் தரப்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர் ரவீந்திரன் மற்றும் டாஸ்மாக் தரப்பு வழக்கறிஞர் சதீஷ் ஆகியோர் தெரிவித்தனர். இதையடுத்து, 2019ம் ஆண்டு குத்தகை காலம் முடிந்த போதும், கடையை காலி செய்யாதது ஏன் எனவும், இதை கேள்வி கேட்டால் காவல் துறையினரை வைத்து வழக்கு தொடர்வீர்களா எனவும், ஏன் இப்படி அடாவடி செய்கிறீர்கள் எனவும் நீதிபதி கேள்வி எழுப்பினார்.

மேலும், மக்களுக்கு எதிராக செயல்படும் டாஸ்மாக் நிர்வாகம், சொந்த வருமானத்தை மட்டுமே பார்ப்பதாகவும், இதுபோல் மீண்டும் புகார் வந்தால் நீதிமன்றம் தீவிரமாக கருதும் எனவும் எச்சரித்த நீதிபதி, கடை வேண்டாம் என மக்கள் கூறினால், போலீசாரை வைத்து கடைகளை நடத்துவீர்களா எனவும் கேள்வி எழுப்பினார். அரசு நிலம் என்றால் சட்டத்தை பயன்படுத்தும் போது, தனி நபர்களுக்கு சட்டம் இல்லையா எனக் கேட்ட நீதிபதி, சட்டத்தை அரசு கையில் எடுக்க கூடாது எனவும் தெரிவித்தார்.

பின்னர், சுந்தருக்கு எதிரான வழக்கில் அடிப்படை முகாந்திரம் இல்லை எனக் கூறி ரத்து செய்த நீதிபதி, குத்தகை காலம் முடிந்தால், கடையை காலி செய்ய வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தும்படியும், டாஸ்மாக் கடை வேண்டாம் என மக்கள் கூறினால், அந்த கடைகளை மாற்ற வேண்டும் எனவும் டாஸ்மாக் நிர்வாக இயக்குனருக்கு உத்தரவிட்டார்.

# குட் பேட் அக்லியுடன் கிளாஸ் விடும் வணங்கான் அஜித்துக்கு நான் போட்டியா?.. அருண் விஜய் பளிச்





பாலாவின் இயக்கத்தில் அருண் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள படம் வணங்கான். இந்த படத்தின் நாயகியாக ரோஷினி பிரகாஷ் நடித்துள்ளார். இயக்குனர் மிஸ்கின் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். சமுத்திரக்கனி, சண்முக ராஜன், அருள்தாஸ் ஆகியோரும் இதில் நடித்துள்ளனர்.


படத்துக்கு ஜி.வி.பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார். யு/ஏ சான்றிதழ் பெற்ற இந்த படம் பொங்கலுக்கு ரிலீஸ் ஆகும் என்று படக்குழு அறிவித்துள்ளது. அருண் விஜய் இன்று [நவம்பர் 19] தனது 47வது பிறந்தநாளை கொண்டாடுவதை முன்னிட்டு இந்த அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது.

இதற்கிடையே தனது பிறந்தநாளை ஒட்டி ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் ரத்த தானம் செய்துள்ளார். அதன்பின் செய்தியாளர்களை சந்தித்து அவர் பேசினார். வணங்கான் தனது கேரியரில் முக்கியமான படமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை, பாலா சாருக்கு நன்றி, ஒரு நடிகரா என்னை வேறு பரிணாமத்தில் இப்படம் காட்டும் என்று தெரிவித்தார்.

தொடர்ந்து பாலா படம் என்றாலே கஷ்டமாகத்தான் இருக்கும் என்று சொல்வார்களே என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், இந்தப் படத்தில் நான் கஷ்டப்படவில்லை. இஷ்டப்பட்டுதான் எல்லா விஷயங்களையும் செய்தேன். பாலா சாருடன் இணைந்து பணியாற்றியது எனக்கு நல்ல அனுபவமாக இருந்தது என்றார்.

தொடர்ந்து அஜித்தின் 'குட் பேட் அக்லி' படமும் பொங்கல் தினத்தை முன்னிட்டு வெளியாகிறது. அஜித் சாருக்கும், உங்களுக்கும் போட்டி இருக்குமா? என்று கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த அருண் விஜய், அஜித் சார் உச்சம். அவருக்கும் யாரும் போட்டி கிடையாது. அவருடைய ரசிகர்களும் என்னை நேசிகிறார்கள். நிச்சயமாக போட்டி எதுவும் கிடையாது என்று தெரிவித்தார். மேலும் விஜய் தவெக என்ற அரசியல் கட்சி தொடங்கியது பற்றிய கேள்விக்கு பதிலளித்த அவர், விஜய் சாரின் அரசியல் பயணம் வெற்றிப் பயணமாக அமைய எனது வாழ்த்துக்கள் என்று தெரிவித்தார். அஜித் மற்றும் அருண்விஜய் இணைத்து என்னை அறிந்தால் படத்தில் நடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# அருண் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு.. பாலாவின் 'வணங்கான்' ரிலீஸ் தேதி அறிவிப்பு



தமிழ் சினிமாவுக்கு தனித்துவமான படங்களை கொடுத்த பாலாவின் இயக்கத்தில் அருண் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள படம் வணங்கான். இந்த படத்தின் நாயகியாக ரோஷினி பிரகாஷ் நடித்துள்ளார். இயக்குனர் மிஸ்கின் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். படத்துக்கு ஜி.வி.பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார். இப்படத்திற்கு யு/ஏ சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. படத்தின் இறுதிக்கட்ட பணிகள் நிறைவடைந்த நிலையில் ரிலீசுக்காக ரசிகர்கள் காத்திருக்கின்றனர். கடந்த ஜூலை 6 ஆம் தேதி வெளியான படத்தின் டிரைலர் எதிர்பார்ப்பை மேலும் அதிகரித்தது.

பிதாமகன் விக்ரம் சாயலில் அருண் விஜய் இருப்பதால் படத்தின் கதை குறித்த விவாதங்களும் இருந்து வருகிறது. இந்நிலையில் இன்று [ நவம்பர் 19] படத்தின் நாயகன் அருண் விஜய் தனது 47 வது பிறந்தநாளைக் கொண்டாடி வருகிறார். அவருக்குப் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ள படக்குழு வணங்கான் ரிலீஸ் தேதியையும் போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது. அதன்படி வணங்கான் படம் அடுத்த ஜனவரியில் பொங்கலுக்கு ரிலீஸ் ஆகும் என்பதைப் படக்குழு அறிவித்துள்ளது. பொங்கலுக்கு அஜித் நடித்துவரும் 'குட் பேட் அக்லி', விக்ரம் நடித்து வரும் 'வீர தீர சூரன்' ஆகிய படங்கள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பாங்காக் செல்லும் 'இட்லி கடை' படக்குழு






நடிகர் தனுஷ் இயக்கத்தில் வெளியான பவர் பாண்டி, ராயன் போன்ற படங்கள் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தது. அடுத்தது இவரது இயக்கத்தில் உருவாகி இருக்கும் நிலவுக்கு என் மேல் என்னடி கோபம் திரைப்படம் வருகின்ற டிசம்பர் மாதத்தில் கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு வெளியாகும் என்று சொல்லப்படுகிறது. தனுஷ் இயக்கத்தில் 4 வது படமாக 'இட்லி கடை' என்கிற திரைப்படம் உருவாகி வருவதாக அறிவிப்பு வெளியானது. இது தனுஷின் 52வது திரைப்படமாகும். தனுஷே இயக்கி நடிக்கும் இத்திரைப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கிறார். இந்த படத்தினை டான் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது.

அருண்விஜய் வில்லனாக நடிக்கும் இத்திரைப்படத்தில் ராஜ்கிரண் ஆகியோர் முக்கிய பாத்திரத்தில் நடிக்கின்றனர். 'திருச்சிற்றம்பலம்' படத்தின் நாயகியான நித்யாமேனனுடன் தனுஷ் மீண்டும் இணைகிறார் என்கிற தகவல்கள் ஏற்கனவே வெளியாகின. இந்த படத்தின் படப்பிடிப்பு தேனி பகுதியில் தொடங்கப்பட்டு மிகத் தீவிரமாக நடைபெற்று வந்தது. இதன் முதற்கட்ட படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளது. இந்தநிலையில் இட்லி கடை படத்தின் படப்பிடிப்பு 80 சதவீதம் முடிவடைந்து விட்டதாகவும், மீதமுள்ள காட்சிகளை படமாக்க இந்த வாரம் படக்குழு பாங்காக் செல்ல இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

மேலும் ஒட்டுமொத்த படப்பிடிப்பும் நவம்பர் மாத இறுதிக்குள் நிறைவடைந்து விடும் என்றும் சொல்லப்படுகிறது.

# மகளிர் ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை: ஜப்பானை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது இந்தியா



8வது பெண்கள் ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டி பீகாரில் உள்ள ராஜ்கிர் நகரில் நடந்து வருகிறது. 6 அணிகள் பங்கேற்ற இந்தப் போட்டியில் லீக் சுற்று முடிவில் நடப்பு சாம்பியன் இந்தியா (5 வெற்றி) முதலிடமும், சீனா (4 வெற்றி, ஒரு தோல்வி) 2வது இடமும், மலேசியா (2 வெற்றி, 3 தோல்வி) 3வது இடமும், ஜப்பான் (ஒரு வெற்றி, 2 டிரா, 2 தோல்வி) 4வது இடமும் பிடித்து அரையிறுதிக்கு முன்னேறின.

தென் கொரியா (ஒரு வெற்றி, ஒரு டிரா, 3 தோல்வி) 5வது இடமும், தாய்லாந்து (ஒரு டிரா, 4 தோல்வி) கடைசி இடமும் பெற்று அரையிறுதி வாய்ப்பை இழந்தன.

இந்நிலையில், இன்று நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் உலகதரவரிசையில் 9வது இடத்தில் இருக்கும் இந்திய அணி, 11வது இடத்தில் உள்ள ஜப்பானை எதிர்கொண்டது.

இதில் இந்திய அணி 20 என ஜப்பானை வவீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. இறுதிப்போட்டியில் சீனாவை எதிர்கொள்கிறது.

பிற்பகலில் நடந்த முதல் அரையிறுதியில் மலேசியாவை சீனா வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

# சீனா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன்: முதல் சுற்றில் இந்திய வீராங்கனை அனுபமா வெற்றி



பல முன்னணி வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொள்ளும் சீனா மாஸ்டர்ஸ் சர்வதேச பேட்மிண்டன் போட்டி ஷென்ஜென் நகரில் இன்று தொடங்கியது.

நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் அனுபமா உபாத்யாயா, அமெரிக்காவின் பெய்வென் ஜெங் உடன் மோதினார். இதில் அனுபமா 21-17, 8-21, 22-20 என வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

# இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடர்: பவுமா தலைமையிலான தென் ஆப்பிரிக்க அணி அறிவிப்பு



இலங்கை கிரிக்கெட் அணி தற்போது நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் ஆடி வருகிறது. இந்த தொடர் நிறைவடைந்ததும் இலங்கை அணி தென் ஆப்பிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆட உள்ளது.

இந்த தொடர் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்புக்கு உட்பட்ட தொடர் என்பதால், இரு அணிகளுக்கும் இந்த தொடர் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இந்த தொடர் வரும் 27ம் தேதி தொடங்குகிறது.

இந்நிலையில், இந்த தொடருக்கான தென் ஆப்பிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. தென் ஆப்பிரிக்க அணிக்கு டெம்பா பவுமா கேப்டனாக நியமனம் செய்யப்பட்டுள்ளார் .

தென் ஆப்பிரிக்க அணி விவரம் வருமாறு:

டெம்பா பவுமா (கேப்டன்), டேவிட் பெடிங்ஹாம், ஜெரால்ட் கோட்சி, டி ஜோர்ஜி, மார்கோ ஜான்சன், கேசவ் மகராஜ், மார்க்ரம், வியான் முல்டர், செனுரன் முத்துசாமி, டேன்பீட்டர்சன், ககிசோரபாடா, டிரிஸ்டன் ஸ்டப்ஸ், ரியான் ரிக்கெல்டன், கைல் வேரின் .

**NAMADHU DHINA KANI**
**Canara Bank**
**Account: 120028528266**
**IFSC code: CNRB0001041**

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.